

ஓரியண்ட் ஓட்டோ கெயார் பிளஸ் அல்டிமேட்

காப்புறுதி உற்பத்திகள் குறித்த தகவல் ஆவணம்

உள்ளடக்கம்

1. அறிமுகம் 01
2. காப்புறுதி வரம்பின் சுருக்கம் 01
3. பிரிவு 1 - வாகனத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம் 01
4. பிரிவு 2 - மூன்றாம் தரப்பினருக்கான பொறுப்பு 03
5. பிரிவு 3 - மருத்துவச் செலவுகள் 05
6. பொதுவான நிபந்தனைகள் 05
7. பொதுவான விலக்குகள் - காப்புறுதி செய்யப்படாதவை 09
8. மேலதிக காப்புறுதிகள் (உங்கள் காப்புறுதிப் பத்திரத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்) 11
9. தவணை செலுத்துவதற்கான உத்தரவாதம் 15
10. மோட்டார் வாகனங்களுக்கான கோரிக்கைகளைக் கையாளுதல் - விரைவு வழிகாட்டி 15
11. முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டங்கள் 17
அடுத்து என்ன நடக்கும்? 17
12. பிணக்குத் தீர்வு 17
13. பிற முக்கியத் தகவல்கள் 18

1. அறிமுகம்

இந்த ஆவணத்தின் மூலம் காப்புறுதி, விலக்களிப்புகள் (காப்புறுதி செய்யப்படாதவை) நிபந்தனைகள் மற்றும் மேற்குறிப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட மோட்டார் வாகனக் காப்புறுதிப் பத்திரம் குறித்து வாடிக்கையாளருக்கு எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், சுருக்கத்தை வழங்குகிறது.

2. காப்புறுதி வரம்பின் சுருக்கம்

உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், வரையறுக்கப்பட்ட ஓரியண்ட் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் நீங்கள் காப்புறுதி செய்யப்படுகிறீர்கள். உங்கள் காப்புறுதித் தவணையை செலுத்திய பின்னர் காப்புறுதிக் காலத்தில் ஏற்படும் விபத்து இழப்புகளிலிருந்து இந்தக் காப்புறுதி உங்களைப் பாதுகாக்கிறது. உங்கள் காப்புறுதிப் பத்திரம், விண்ணப்பம், காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் அட்டவணை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களும் ஒன்றுக்கொன்று பிணைந்து ஒரு முழுமையான ஒப்பந்தமாகச் செயற்படும்.

3. பிரிவு 1 - வாகனத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

உங்கள் வாகனம் பின்வருவனவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகிறது:

- எதேச்சையான சேதங்கள்
- தீ, வெடிப்பு, மின்னல் அல்லது தானாகத் தீப்பற்றுதல்
- திருட்டு அல்லது கொள்ளை
- தீங்கிழைக்கும் செயல்கள்
- போக்குவரத்தின் போது ஏற்படும் சேதம் (வீதி, புகையிரதம், நீர், லிப்ட் அல்லது மின்தூக்கி மூலம்)
- இழுத்துச் செல்லுதல் மற்றும் மீட்புச் செலவுகள்: காப்புறுதி செய்யப்பட்ட விபத்தின் காரணமாக உங்கள் வாகனம் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டால், வாகனத்தைப் பாதுகாத்தல், அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பழுதுபார்ப்பாளரிடம் இழுத்துச் செல்லல் மற்றும் பழுதுபார்த்த பின்னர் உங்களிடம் திரும்ப ஒப்படைப்பதற்கும் காப்பீட்டாளரினால் ரூ. 5,000/- வரை செலுத்தப்படும்.

காப்புறுதி செய்யப்படாதவை:

- **டயர்கள் மற்றும் ட்யூப்கள்**
  அதே நேரத்தில் வேறு சேதம் ஏற்பட்டால் மாத்திரமே காப்புறுதி செய்யப்படும் என்பதோடு அதுவும் மாற்றுச் செலவில் 50% வரை மட்டுமாகும்.

- **உதிரிப் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்:**
  முழு வாகனமும் திருடப்பட்டிருந்தாலேயேயன்றி, உதிரிப் பாகங்கள் அல்லது துணைப் பொருட்கள் வெவ்வேறாக திருடப்பட்டிருக்கும்போது காப்புறுதி இல்லை (தனியார் மோட்டார் வாகனங்களைத் தவிர).
- **எயார்பேக்:**
  தெளிவாக அடையாளம் காணக்கூடிய விபத்தின் காரணமாக அவை செயற்பட்டாலே தவிர, காப்புறுதி வழங்கப்படாது.
- **பேருந்து/புகையிரதத்தின் முன்பக்கக் கண்ணாடிகள்:**
  வாகனத்தின் மதிப்பில் 10% வரை மட்டுமே காப்புறுதி வழங்கப்படும்.
- **வாடகை மற்றும் குத்தகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்கள்:**
  விளக்குகள், டயர்கள், சேற்றுக்காவிகள், பம்பர்கள், தாங்கிகள் அல்லது வண்ணப்பூச்சு வேலைகளுக்கு காப்புறுதி இல்லை.
- காலப்போக்கில் ஏற்படும் தேய்மானம் அல்லது மதிப்பிழப்பு காரணமாக ஏற்படும் சேதம்
- இயந்திர, மின் அல்லது இலத்திரனியல் பழுதுகள்
- மைக்ரோசிப்கள் அல்லது அதுபோன்ற சாதனங்களில் ஏற்படும் கோளாறுகள் (உதாரணமாக: திகதி அறிதல் சிக்கல்கள்)
- அதிகப்படியான சுமை அல்லது ஏற்றப்படும் சுமையின் தன்மை காரணமாக ஏற்படும் சேதம்

கிளைம் செய்யாததற்கான போனஸ் (No Claim Bonus) - பாதுகாப்பான ஓட்டுதலுக்கான உங்களுக்கு உரித்தாகும் பரிசு

உங்கள் காப்புறுதி காலத்தில் நீங்கள் எந்தவொரு உரிமைக் கோரலையும் செய்யவில்லை என்றால், உங்கள் காப்புறுதிப் பத்திரத்தை புதுப்பிக்கும்போது உங்களுக்கு புதுப்பித்தல் தவணையில் தள்ளுபடி கிடைக்கும்.

நீங்கள் எவ்வளவு காலம் உரிமைக்கோரல் செய்யாமல் இருக்கின்றீர்களோ, அந்த அளவிற்கு அதிக தள்ளுபடியைப் பெறுவீர்கள்!

முக்கிய குறிப்புகள்

- **காப்புறுதிப் பத்திரத்தை மாற்றுதல்:**
  காப்புறுதிப் பத்திரம் மற்றொரு நபருக்கு மாற்றப்பட்டால், அவர்களின் கிளைம் செய்யாததற்கான போனஸ் புதிதாகத் தொடங்கும்.
- **பல வாகனங்கள் இருக்கும்போது:**
  கிளைம் செய்யாததற்கான போனஸ் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாகக் கணக்கிடப்படும்.
- **ஒரு கிளைமிற்குப் பின்னர்:**
  நீங்கள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக கிளைம் செய்யாததற்கான போனஸைப் பெற்றிருந்தால், ஒரு கிளைமிற்குப் பின்னர் 3 ஆண்டுகளுக்கான கொடுப்பனவுத் தொகை மட்டுமே கழிக்கப்படும்.
- **குறுகிய கால காப்புறுதி:**
  குறுகிய கால காப்புறுதிப் பத்திரங்களுக்கு நோ-கிளைம் போனஸ்கள் பொருந்தாது.

4. பிரிவு 2 - மூன்றாம் தரப்பினருக்கான பொறுப்பு

உங்கள் வாகனத்தால் மற்றவர்களுக்கு ஏற்படும் காயங்கள் அல்லது சொத்து சேதங்களுக்கான உங்கள் சட்டப் பொறுப்பை இது காப்புறுதி செய்கிறது. வாகனத்தின் வகையைப் பொறுத்து (தனியார் மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், வணிக வாகனங்கள்) காப்புறுதி வரம்பு மாறுபடும்.

ஏனையவர்களுக்கு ஏற்படும் காயம் அல்லது மரணம்

- வரம்பற்ற சட்டப் பொறுப்புக் காப்புறுதி உரித்தாகும்.

மூன்றாம் தரப்பினரின் சொத்து சேதம்

- தனியார் மோட்டார் கார்கள்: ரூ. 10,000,000/- வரை.
- மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வணிக வாகனங்கள்: ரூ. 30,000/- வரை.

சட்டச் செலவுகள் மற்றும் பிரதிநிதித்துவம்

- காப்பீட்டாளரின் முன் அனுமதியுடன் காப்புறுதி செய்யப்படும்.
- சட்ட நடவடிக்கைகளின்போது உங்களுக்காக முன்னிலையாவதற்கு காப்பீட்டாளருக்கு இயலுமை உண்டு.

காப்புறுதி செய்யப்படாதவை

- வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களைத் தவிர, பொது வீதிகளுக்கு வெளியே பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குவதால் ஏற்படும் காயங்கள் அல்லது சேதங்கள்.
- வேலை நேரங்களில் ஊழியர்களுக்கு ஏற்படும் காயங்கள்.
- அனுமதி பெறாத பயணிகளுக்கு ஏற்படும் காயங்கள்.
- உங்களுடைய சொந்த வீடு அல்லது வீட்டு பொருட்களுக்கு ஏற்படும் சேதம்.
- வாகனத்தின் நிறை அல்லது அதிர்வு காரணமாக உட்கட்டமைப்பு வசதிகளுக்கு (உ.ம்: பாலங்கள், வீதிகள் போன்றவை) ஏற்படும் சேதம்.
- பொது வீதிகளில் ஏற்படும் விபத்துகளைத் தவிர, தீப்பொறிகள், சாம்பல் அல்லது கொதிகலன் வெடிப்புகளால் ஏற்படும் சேதம்.

இறப்பு அல்லது நிரந்தர அங்கவீன நிலைக்கான மாற்று இழப்பீட்டுத் திட்டம்

மோட்டார் வாகன விபத்துகளால் பாதிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு இந்தத் திட்டத்தின் மூலம் நீதிமன்றத்திற்கு புறம்பாக விரைவான இழப்பீட்டை வழங்குகிறது.

யார் உரிமை கோரலாம்?

- மோட்டார் வாகன விபத்து காரணமாக இறக்கும் அல்லது நிரந்தர அங்கவீன நிலைக்கு உட்படும் மூன்றாம் தரப்பு பாதிக்கப்பட்டவர்கள்.
- பாதிக்கப்பட்டவர் இறந்துவிட்டால், அவர்களின் சட்டரீதியான வாரிசுகள் (கணவன்/மனைவி, குழந்தைகள் அல்லது பெற்றோர்)

இழப்பீட்டுத் தொகை

- இறப்பு ஏற்பட்டால்: ரூ. 1,000,000/-
- நிரந்தர ஊனம் ஏற்பட்டால்: பாதிப்பின் தீவிரத்தைப் பொறுத்து ரூ. 1,000,000/- வரை (காப்புறுதிப் பத்திரத்தின் இணைப்பு 02(அ)-இன் படி)

முக்கிய நிபந்தனைகள்

- வாகனத்திற்கு குறைந்தபட்சம் மூன்றாம் தரப்பு காப்புறுதியேனும் இருக்க வேண்டும்.
- விபத்து இடம்பெற்று 12 மாதங்களுக்குள் மரணம் அல்லது அங்கவீன நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.
- விபத்து நடந்த 6 மாதங்களுக்குள் உரிமைக்கோரிக்கைகள் (கிளைம்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- இந்த இழப்பீடு நல்லெண்ணத்தின் அடிப்படையில் பக்கச்சார்பின்றி (நன்னம்பிக்கையுடன் செய்யப்பட்ட ஒரு கொடுப்பனவாக) வழங்கப்படுவதோடு, ம இது சட்டரீதியான பொறுப்பை ஒப்புக்கொள்வதாக அமையாது.

யார் தகுதி பெறமாட்டார்கள்?

- விபத்திற்குள்ளான வாகனத்தின் சாரதிகள், ஊழியர்கள் அல்லது பயணிகள்.
- வேண்டுமென்றே விபத்துக்களை ஏற்படுத்துபவர்கள்.
- கலவரங்கள் அல்லது பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான விபத்துக்கள்.

எப்படி விண்ணப்பிப்பது?

- காப்புறுதிப் பத்திரத்தின் இணைப்பு 02 இல் உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தவும்.
- அதை சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்திடம் சமர்ப்பிக்கவும்.

சட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன

- மேலதிக இழப்பீடு பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடும் வாய்ப்பு உங்களுக்கு மேலும் இருக்கும்.
- நீதிமன்றம் அதிக இழப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தால், காப்புறுதி நிறுவனம் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையை அதிலிருந்து கழித்துவிடும்.
- ஒரு சட்டக் கட்டமைப்பு நடைமுறைக்கு வரும் வரை, காப்புறுதிக் குறைதீர்ப்பாளர் (Insurance Ombudsman) பிணக்குகளைக் கையாள்வார்.

சட்டரீதியான உரிமைகள் மற்றும் ஏற்பு

- இந்த காப்புறுதிப் பத்திரம், 1951 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் உள்ள உங்கள் சட்டரீதியான உரிமைகளைப் பாதிக்காது.
- காப்பீட்டாளர், சட்டரீதியான ஒதுக்கீடுகளின் கீழோ அல்லது மாற்று இழப்பீட்டுத் திட்டத்தின் கீழோ இழப்பீடு வழங்கினால், மேலும் அத்தகைய கொடுப்பனவுகள் பொதுவாக காப்புறுதியின் கீழ் வராத பட்சத்தில், நீங்கள் அந்தத் தொகையைக் காப்பீட்டாளருக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

இழப்பீட்டின் வரம்புகள்

- ஒரே விபத்தில் பல நபர்கள் காயமடைந்தால், ரூ. 10,000 என்ற வரம்பு, செலுத்தப்பட்ட மொத்தத் தொகைக்கு மட்டுமே பொருந்துமேயன்றி அது எந்த ஒரு தனி நபருக்கும் அல்ல.
- இழப்பீடு பெறுவதில் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. பிரிவு 3 - மருத்துவச் செலவுகள்

நீங்கள் அல்லது உங்கள் காப்புறுதி செய்யப்பட்ட தனியார் மோட்டார் வாகனத்தில் பயணிக்கும் எவரேனுமொரு பயணிகளுக்கு விபத்தில் காயம் ஏற்பட்டால், காப்புறுதி நிறுவனம் ஒரு விபத்திற்கு ரூ. 10,000/- வரையிலான மருத்துவச் செலவுகளைத் திருப்பிச் செலுத்தும்.

- காயம் வன்முறையான, தற்செயலான, வெளிப்புற மற்றும் கண்ணுக்குத் தெரியும் காரணங்களால் ஏற்பட்டிருக்க வேண்டும்.
- இந்தக் காப்புறுதி உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்திற்கு மட்டுமே பொருந்தும்.

6. பொதுவான நிபந்தனைகள்

காப்புறுதி செய்யப்பட்டவர் என்ற வகையில் உங்கள் பொறுப்புகள்

1. **நியாயமான கவனம்**
   - உங்கள் வாகனத்தை நல்ல நிலையில் மற்றும் செலுத்துகைக்கு உகந்த நிலையில் வைத்திருக்க வேண்டும்.
   - சேதத்தைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நீங்கள் எடுக்க வேண்டும்.
2. **விபத்து ஏற்பட்ட பின்னர் அல்லது செயலிழப்பின் பின்னர்**
   - முறையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் இல்லாமல் வாகனத்தைக் கவனிக்காமல் விட்டுச் செல்லாதீர்கள்.
   - வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்கு முன்பு நீங்கள் அதை செலுத்தினால், அதன் பிறகு ஏற்படும் எந்தவொரு சேதத்திற்கும் நீங்களே பொறுப்பாவீர்கள்.
3. **பரிசோதிப்புக்கான அணுகல்**
   - காப்புறுதி நிறுவனத்திற்கு எந்த நேரத்திலும் உங்கள் வாகனத்தை பரிசோதனை செய்யவோ அல்லது உங்கள் சாரதி அல்லது ஊழியர்களிடம் பேசவோ உரிமை உண்டு.

காப்புறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

- **காப்புறுதி நிறுவனத்தால்:** உங்களுக்கு 7 நாள் முன்னறிவிப்புடன் நிறுவனத்திற்கு உங்கள் காப்புறுதிப் பத்திரத்தை நீங்கள் இரத்துச் செய்யலாம். அதன்போது உங்கள் தவணையில் பயன்படுத்தப்படாத பகுதிக்கான தொகை உங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

- **உங்களால்:** பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 7 நாள் முன்னறிவிப்புடன் உங்களுக்கு காப்புறுதிப் பத்திரத்தை இரத்து செய்யலாம்:
  - எந்தவொரு உரிமைக்கோரிக்கையும் செய்யப்படாதிருத்தல்.
  - அனைத்து காப்புறுதிச் சான்றிதழ்களும் மீள ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
  - பணம் திரும்பச் செலுத்துதல் காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் இருத்தல்.

வேறு காப்புறுதிகள்

அதே இழப்பை ஈடுசெய்யும் மற்றொரு காப்புறுதி இருந்தால், இந்தக் காப்புறுதியின் மூலம் உரிமைக்கோரிக்கையின் நியாயமான பங்கு மட்டுமே செலுத்தப்படும்.

பிணக்குத் தீர்வு

செலுத்தப்பட வேண்டிய தொகை குறித்து உடன்படாத நிலை காணப்படுமாயின் (பொறுப்பு குறித்து அல்ல) அது 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத்தீர்ப்புச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றத்தின் மூலம் தீர்க்கப்படும்.

- நடுவர் மன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரை எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது.
- மோசடி நடந்திருந்தால், தவணையை திரும்பப் பெறுவதற்கான உங்கள் உரிமையை நீங்கள் இழக்க நேரிடலாம்.

மோசடியான உரிமைக்கோரிக்கைகள்

நீங்களோ அல்லது உங்கள் சார்பாகச் செயல்படும் ஒருவரோ:

- மோசடியான உரிமைக் கோரிக்கையை முன்வைத்தால்,
- போலி ஆவணங்கள் அல்லது அறிக்கைகளைப் பயன்படுத்தினால்,
- வேண்டுமென்றே சேதத்தை ஏற்படுத்தினால்,
- இந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உள்ள அனைத்துப் பலன்களும் செல்லுபற்றதாகிவிடும்.

பொதுவான விதி – சந்தைப் பெறுமதியின் முக்கியத்துவம்

- உங்கள் வாகனத்தின் காப்புறுதிப் பெறுமதி அதன் தற்போதைய சந்தைப் பெறுமதியை விடக் குறைவாக இருந்தால், உங்கள் உரிமைக் கோரிக்கை தொகை விகிதாசாரப்படி குறைக்கப்படும்.
- உங்கள் வாகனம் அதிக பெறுமதிடையதாக இருக்கும்போது, காப்புறுதி நிறுவனம் சந்தைப் பெறுமதி வரை மட்டுமே செலுத்தும் என்பதுடன், காப்புறுதித் தொகையை அல்ல.
- சந்தைப் பெறுமதி என்பது ஆரம்பக் கொள்வனவு விலை அல்ல, மாறாக நன்றாகப் பராமரிக்கப்பட்ட நிலையில் உள்ள அதே போன்ற ஒரு வாகனம் இன்று விற்கப்படும் விலையாகும்.

புதிய உதிரிப் பாகங்களுக்கான பங்களிப்பு

ஒரு விபத்திற்குப் பின்னர் நீங்கள் புதிய புதிய நிலையிலுள்ள ஆரம்ப உதிரிப்பாகங்களைத் தேர்ந்தெடுத்தால், வாகனத்தின் உற்பத்திக் காலத்தின் அடிப்படையில் செலவின் ஒரு பகுதியை நீங்கள் ஏற்க வேண்டியிருக்கும்.

தேய்மானம் மற்றும் மதிப்பிழப்புக்கான கழிவுகள்

இரப்பரால் செய்யப்பட்ட பொருட்கள், இயந்திர, மின்/இலத்திரனியல் பாகங்கள் மற்றும் மசகு எண்ணெய்களுக்கான இழப்பீட்டுக் கோரிக்கைகள், அவற்றின் தேய்மானம் அல்லது வெளிப்புறச் சூழலுக்கு உட்படுதல் காரணமாக 50% வரை குறைக்கப்படலாம்.

உரிமைக் கோரிக்கை நடைமுறை - நீங்கள் செய்ய வேண்டியவை

உங்கள் வாகனம் விபத்தொன்றுக்கு அல்லது சேதமொன்றுக்கு உட்பட்டால், காப்புறுதி உரிமைக்கோரிக்கை செய்வதற்கான படிப்படியான வழிகாட்டுதல் இதோ:

1. காப்புறுதி நிறுவனத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கவும்

விபத்து, இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டவுடன், காப்புறுதி நிறுவனத்திற்கு எழுத்துமூலமாகத் தெரிவிக்கவும்.

2. 15 நாட்களுக்குள் உங்கள் உரிமைக்கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்

விபத்து இடம்பெற்று 15 நாட்களுக்குள், உரிமைக்கோரிக்கை படிவத்தைப் பூர்த்தி செய்து, தேவையான அனைத்து ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும்.

3. அனைத்து சட்ட ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும்

உங்களுக்குக் கிடைக்கும் எந்தவொரு கடிதம், உரிமைக்கோரிக்கை, அழைப்பாணை அல்லது சட்ட அறிவித்தலையும் பெற்றவுடன் உடனடியாகக் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பவும்.

4. குற்றச் செயல்கள் தொடர்பாக உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிக்கவும்

சம்பவம் திருட்டு அல்லது வேறு ஏதேனும் குற்றச் செயலுடன் தொடர்புடையதாக இருந்தால், உடனடியாகக் பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவித்து, காப்புறுதி நிறுவனத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படவும்.

5. எந்தவொரு கடமைகளையும் ஏற்க வேண்டாம்

காப்புறுதி நிறுவனத்தின் எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு வாக்குறுதிகளையும், கொடுப்பனவுகளையும் அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்வதையும் செய்ய வேண்டாம்.

6. காப்புறுதி நிறுவனம் வழக்கை ஏற்க இடமுண்டு.

காப்புறுதி நிறுவனம் உங்கள் சார்பாக உரிமைக் கோரிக்கைகளின்போது எதிர்வாதக்கூற்று அல்லது உரிமைக்கோரிக்கைகளின் தீர்வைக் கையாளலாம் என்பதோடு, இதற்கு உங்கள் முழு ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

பிணக்குத் தீர்வுக்கான அடிப்படை

- ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்வது, மாற்றுவது அல்லது அதற்கான தொகையைச் செலுத்துவது ஆகியவற்றில் காப்புறுதி நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பார்.
- செலுத்தப்படும் தொகை பின்வருவனவற்றில் குறைந்தபட்ச தொகையை விட அதிகமாக இருக்காது:
  - உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதிப் பெறுமதி.
  - வாகனம் மற்றும் பாகங்களின் தற்போதைய சந்தைப் பெறுமதி.
- தொடர்புடைய பாகங்களை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனில், காப்புறுதி நிறுவனம் பின்வருவனவற்றின் அடிப்படையில் செலவை நிர்ணயிக்கும்:

- இலங்கையில் உள்ள உற்பத்தியாளர் அல்லது முகவரிடம் கிடைக்கும் சமீபத்திய விலைப்பட்டியல்.
- அல்லது உற்பத்தியாளரின் விலை மற்றும் கப்பல் செலவுகள் (விமானப் பொருட் கட்டணங்கள் தவிர்த்து) இறக்குமதி வரிகள் மற்றும் பொருத்துதல் செலவுகள் ஆகியவற்றின் கூட்டுத்தொகை.

உங்கள் காப்புறுதிப் பத்திரத்தை புதுப்பித்த நிலையில் வைத்திருத்தல்

ஏதேனும் **குறிப்பிடத்தக்க மாற்றங்கள்** (உ.ம்: பயன்பாடு, உரிமை, மாற்றங்கள்) ஏற்பட்டால் நீங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், உரிமைக்கோரல் (க்ளைம்) செய்யும் உங்கள் இயலுமைக்கு பாதிப்பு ஏற்பட முடியும் என்பதோடு, காப்புறுதி **செல்லுபடியற்றதாவதற்கும்** காரணமாக அமையலாம்.

தகவல் வெளிப்படுத்தல் கடமை

காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போதோ அல்லது உரிமைக்கோரல் கோரும்போதோ, தொடர்புடைய அனைத்து விடயங்களையும் நீங்கள் முழுமையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்த வேண்டும். தவறான தகவல்களை வழங்குவது அல்லது தகவல்களை மறைப்பது பின்வருவனவற்றிற்கு வழிவகுக்கும்:

- உங்கள் காப்புறுதிப் பத்திரம் இரத்துச்செய்யப்படும்
- காப்புறுதி இழப்பு.
- உரிமைகோரல்கள் மறுக்கப்படுதல்.

ஹைப்பிரிட்/மின்சார பேட்டரி

பேட்டரி, இன்வெர்ட்டர் அல்லது மோட்டாரில் ஏற்படும் சேதங்களுக்கு நிறுவனம் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே இழப்பீடு வழங்கும்:

- அந்தச் சேதம் வெளிப்புறத் தவிர்க்க முடியாத நிகழ்வால் ஏற்பட்டிருக்க வேண்டும், மற்றும்
- அதே நேரத்தில் வாகனத்திற்கும் வேறு சேதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அதிகபட்சப் உத்தரவாதம்: இழப்பீட்டுத் தொகை பின்வரும் தொகைகளில் குறைந்த தொகையாக இருக்கும்:

- வாகனத்தின் காப்புறுதித் செய்யப்பட்ட பெறுமதியில் 10%.
- விபத்து நடந்த நேரத்தில் வாகனத்தின் சந்தைப் பெறுமதியில் 10%.
- அதே போன்ற பேட்டரி/இன்வெர்ட்டர்/மோட்டாரின் தற்போதைய சந்தைப் பெறுமதி.
- சேதமடைந்த பாகத்தை விபத்திற்கு முந்தைய நிலைக்குச் சரிசெய்வதற்கான செலவு.

தவணை செலுத்தும் முறை

காப்புறுதிப் பத்திரத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகளைப் பயன்படுத்தி, காப்புறுதித் தொகை செலுத்தும் உத்தரவாத காலத்திற்குள் (30 நாட்கள்) தவணை செலுத்தப்பட வேண்டும்.

7. பொதுவான விலக்குகள் - காப்புறுதி செய்யப்படாதவை

உங்கள் காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் பின்வரும் சூழ்நிலைகள் உள்ளடக்கப்படாது:

இலங்கைக்கு வெளியே - இலங்கைக்கு வெளியே நிகழும் விபத்துகள் அல்லது இழப்புகள்.

தாமதமான அறிவிப்பு – காப்புறுதி நிறுவனத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கப்படாத கோரிக்கைகள்.

ஒப்பந்தக் கடமைகள் - ஒப்பந்தக் கடமைகளின் அடிப்படையிலான கோரிக்கைகள்.

வாகனத்தின் முறையற்ற பயன்பாடு - அதாவது, வாகனம்:

- அங்கீகரிக்கப்படாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்போது.
- காப்புறுதிச் சான்றிதழில் குறிப்பிடப்படாத ஒருவரால் அது ஓட்டப்படும்போது.
- வாகனம் வீதியில் செலுத்துவதற்குத் தகுதியற்ற நிலையில் இருக்கும்போது.

யுத்தம் மற்றும் பயங்கரவாதம் - இவற்றால் ஏற்படும் இழப்புகள்:

- போர், படையெடுப்பு, கலவரம் அல்லது உள்நாட்டுக் கலவரம்.
- வேலைநிறுத்தங்கள், கலவரங்கள், உள்நாட்டுக் கலவரம் அல்லது பயங்கரவாதச் செயல்களால் ஏற்படும் இழப்புகள்.
- இந்த நிகழ்வுகளுடன் இழப்பு தொடர்புடையது அல்ல என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

மது அல்லது போதைப்பொருள் - சாரதி மது, போதைப்பொருள் அல்லது தடைசெய்யப்பட்ட பொருட்களின் செல்வாக்கின் கீழ் இருக்கும்போது ஏற்படும் விபத்துக்கள்.

தடைகள் - காப்புறுதி செய்யப்பட்டவர் அல்லது பயனாளி, தடைகளை விதித்துள்ள ஒரு நாட்டைச் சேர்ந்தவராக இருந்தால் அல்லது பொருளாதாரப் பலன்களைப் பெறுவது சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால், காப்புறுதி கிடைக்காது.

எழக்கூடிய அபாயங்கள் - காப்புறுதி வழங்கப்படாது

- மின்காந்தப் புலங்கள்: கதிர்வீச்சு அல்லது மின்காந்தப் புலக் கோளாறுகளால் ஏற்படும் சேதங்களுக்கான உரிமைக்கோரல்.
- மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள்: மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் தொடர்பான உரிமைக்கோரல்.
- TSE நோய்கள்: BSE (பைத்தியம் பிடித்த மாட்டு நோய்) மற்றும் அது தொடர்பான பாதிப்புகள் இதில் அடங்கும்.
- நச்சுப் பூஞ்சை மற்றும் ஈரப்பதத்தால் ஏற்படும் சேதம்: பூஞ்சை, பங்கஸ், அழுகல் மற்றும் நீரினால் ஏற்படும் சிதைவு ஆகியவை இதில் அடங்கும்.

அணுசக்தி அபாயங்கள் - குறிப்பிட்ட முன்-சேமிப்பு அல்லது போக்குவரத்து நிகழ்வுகளைத் தவிர, அணுமின் நிலையங்கள், எரிபொருள் அல்லது கழிவுகளுக்கு ஏற்படும் சேதங்களுக்கு காப்புறுதி இல்லை.

அரசியல் அபாயங்கள் - அரசாங்க அதிகாரிகளால் பறிமுதல், கையகப்படுத்துதல் அல்லது அழித்தல் ஆகியவற்றால் ஏற்படும் சேதங்களுக்கு காப்புறுதி இல்லை.

வாகனங்களுக்கு மாத்திரமான விஷேட விலக்குகள்

மோதல் இல்லாமல் வாகனம் கவிழ்வதற்கு காப்பீடு இல்லை

வெளிப்புற விபத்து இல்லாமல் வாகனம் கவிழ்வதற்கு காப்புறுதி இல்லை (உ.ம்: பொருட்களை இறக்கும் போது).

மாற்றியமைக்கப்பட்ட ஸ்டீயரிங்கிற்கு காப்புறுதி இல்லை

மாற்றியமைக்கப்பட்ட ஸ்டீயரிங் அமைப்புக்கு காப்புறுதி இல்லை.

வாகன உருவாக்கத்தின் போது

பணித்தளத்தில் ஏற்படும் சேதங்களுக்கு காப்புறுதி இல்லை.

தொழில்முறை கருவியாகப் பயன்படுத்தும்போது காப்புறுதி இல்லை

வாகனம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும்போது (உ.ம்: கிரேன்கள், டிப்பர்கள்) ஏற்படும் சேதங்களுக்கு, தீ, திருட்டு அல்லது வெடிப்பு நிகழ்வுகளைத் தவிர, காப்புறுதி இல்லை.

மூன்றாம் தரப்புக் கருவியாகப் பயன்படுத்தும்போது

சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ளவாறு தவிர, வாகனம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும்போது மூன்றாம் தரப்புப் பொறுப்புக் காப்புறுதி இல்லை.

அதிகப்படியான சுமை ஏற்றுதல்

அதிகப்படியான சுமை ஏற்றுதல் அல்லது அழுத்தத்தால் ஏற்படும் சேதங்களுக்கு காப்புறுதி இல்லை.

பின்வருவனவற்றிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது அவற்றுடன் தொடர்புடையதாகவோ எழும் எந்தவொரு இழப்பு, சேதம், பொறுப்பு அல்லது செலவையும் இந்தக் காப்புறுதி உள்ளடக்காது:

சைபர் தாக்குதல் விலக்கு

சேதத்தை ஏற்படுத்தும் ஒரு வழியாகப் பின்வருவனவற்றைப் பயன்படுத்துதல் அல்லது இயக்குதல்:

- கணனிகள் அல்லது கணனிக் கட்டமைப்புகள்
- மென்பொருள் நிகழ்ச்சிகள்
- தீங்கிழைக்கும் குறியீடு (Malicious Code) அல்லது கணனி வைரஸ்கள்
- இலத்திரனியல் செயல்முறைகள் அல்லது அமைப்புகள்

மென்பொருள் செயலிழப்பு விலக்கு

பின்வருவனவற்றில் ஏற்படும் ஏதேனும் மென்பொருள் பிழைகள், தவறுகள், செயலிழப்புகள் அல்லது கோளாறுகள் அதாவது,

- வாகனத்தின் கணினி அமைப்புகளில் நிறுவப்பட்டுள்ள நிகழ்ச்சியொன்றுக்கு
- செலுத்துவதற்கு அல்லது பாதுகாப்பு நடைமுறைகளுக்கு உதவும் கட்டமைப்புக்களில்

– வாகனத்தில் உள்ள வேறு ஏதேனும் இலத்திரனியல் அமைப்பில் ஏற்படும் ஏதேனுமொரு கோளாறு காரணமாக அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படும் நட்டம், சேதம் இந்தக் காப்புறுதியின் மூலம் உள்ளடக்கப்படாது.

8. மேலதிக காப்புறுதிகள் (உங்கள் காப்புறுதிப் பத்திரத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்)

கட்டாய உபரித்தொகை - ஒவ்வொரு கோரிக்கைக்கும் நீங்கள் செலுத்த வேண்டிய ஒரு கட்டாயத் தொகை (இது உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது). மீதமுள்ள தொகையை காப்புறுதி நிறுவனம் செலுத்தும்.

எயார்பேக்குகளுக்கான சிறப்பு நீட்டிப்பு - விபத்தைத் தவிர்க்க முயற்சிக்கும்போது ஏற்படும் அதிகப்படியான அழுத்தத்தால் எயார்பேக்குகள் விரிந்தால், **அவற்றை மாற்றுவதை** இது உள்ளடக்கும்.

இயற்கைப் பேரிடர் காப்புறுதி

மேலதிக தவணையொன்றுடன், பின்வருவனவற்றால் ஏற்படும் சேதங்களுக்குக் காப்புறுதி வழங்கப்படுகிறது:

- இலங்கையின் வானிலை அல்லது புவியியல் அதிகாரிகளால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட
- வெள்ளம், புயல்கள், மண்சரிவுகள், சூறாவளிகள், பூகம்பங்கள், சுனாமிகள், எரிமலை வெடிப்புகள் மற்றும் பிற.

இந்த நீட்டிப்பின் கீழ் காப்புறுதி செய்யப்படாதவை

- பின்விளைவு சேதம்,
- பனிக்கட்டி மழையால் ஏற்படும் சேதம்,
- மண்சரிவுகள் அல்லது கடல் அரிப்பு (காப்புறுதி செய்யப்பட்ட பேரிடரால் ஏற்பட்டாலன்றி)

குறிப்பு: இதே சேதம் ஏற்கனவே மற்றொரு காப்புறுதிக் கொள்கையின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டிருந்தால், இந்தக் காப்புறுதி மற்ற கொள்கையால் செலுத்தப்பட்ட மேலதிக தொகைக்கு மட்டுமே பொருந்தும்.

வாடகை அடிப்படையிலான கொள்வனவு / குத்தகை மாற்றங்கள் / நிறுவனக் கடன்கள் - உங்கள் வாகனம் வாடகை அடிப்படையிலான கொள்வனவு, குத்தகை அல்லது கடன் வசதியின் கீழ் இருந்து, அது முழுமையாக சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டால், காப்பீட்டாளர் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்திற்கு நேரடியாக இழப்பீட்டைச் செலுத்துவார்.

தனிநபர் விபத்து நன்மைகள்

மேலதிக தவணை செலுத்துவதன் மூலம், காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்தில் ஏறும்போதும், இறங்கும்போதும் அல்லது பயணிக்கும்போதும் ஏற்படும் விபத்துக் காயம் அல்லது மரணத்திற்கு நீங்கள் காப்புறுதி பெறுகிறீர்கள்.

காப்புறுது செய்யப்படும் நபர்கள்:

- பயணிகள் (பணியாளர்கள் அல்லாதவர்கள்)
- காப்புறுதி செய்யப்பட்டவர், காப்புறுதி செய்யப்பட்டவரின் துணைவர் அல்லது நியமிக்கப்பட்ட நபர்கள்
- சம்பளம் பெறும் சாரதிகள்

நிபந்தனைகள்

- வயது எல்லை: 16 முதல் 70 ஆண்டுகள்
- தற்கொலை, தன்னுடலை காயப்படுத்திக்கொள்ளுதல் அல்லது போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் காயங்களுக்கு காப்புறுதி இல்லை.
- காப்புறுதி செய்யப்பட்டவரின் ஒப்புதலுடன் மட்டுமே, காப்புறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவின்படி இழப்பீடு வழங்கப்படும்.

பயணிகள் இடர் - வர்த்தக வாகனங்களுக்கு மட்டும்

மேலதிக தவணையுடன், வர்த்தக வாகனங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு ஏற்படும் காயம் அல்லது மரணத்திற்கான சட்டப் பொறுப்பை இது உள்ளடக்குகிறது.

முக்கியமானது:

- பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இருக்கை கொள்ளளவுக்கு மட்டுமே காப்புறுதி வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் சாரதி மற்றும் நடத்துநர்/உதவியாளர் அடங்குவர்.

மூன்றாம் தரப்பு சொத்து சேதம் - உங்கள் வாகனத்தால் மற்றவர்களின் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதத்திற்கான சட்டப் பொறுப்பை இது உள்ளடக்குகிறது. காப்பீட்டின் வரம்பு உங்கள் காப்புறுதிப் பத்திரத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயிற்சி பெறும் சாரதி பொறுப்புத் துறப்பு - அனைத்து சட்டப்பூர்வ தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், வாகனம் ஒரு பயிற்சி பெறும் சாரதியால் செலுத்தப்படும்போது உங்கள் வாகனத்திற்கு இது காப்புறுதி அளிக்கிறது. அத்தகைய பயன்பாட்டினால் எழும் எந்தவொரு கோரிக்கைக்கும் முதல் ரூ. 7,500/-க்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்.

விலக்கப்பட்ட பொருட்களை உள்ளீடுசெய்தல் - விளக்குகள், டயர்கள், மட்கார்டுகள், பம்பர்கள் மற்றும் பெயிண்ட் வேலைப்பாடுகளுக்கு ஏற்படும் சேதங்களை இது உள்ளடக்கும். ஒரு உரிமைக்கோரலுக்கு ரூ. 1,000/- மேலதிக கட்டணத்திற்கு உட்பட்டது.

வாடகை வாகனங்கள் (வாடகைக்கு பெறப்பட்ட சாரதியால் செலுத்தப்படும்போது) - வாகனம் வாடகைக்கு எடுக்கப்படும்போது, பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உங்கள் வாகனத்திற்கு இது காப்புறதி அளிக்கிறது, அதாவது வாகனம்:

- வாடகைக்கு எடுப்பவர் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, காப்புறுதித் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- வாடகைக்கு எடுப்பவரால் ஏற்படும் திருட்டு அல்லது தவறான பயன்பாடு மற்றும் சுங்கக் கட்டணம் செலுத்தும் போக்குவரத்து நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் ஆகியவை விலக்கப்பட்டுள்ளன.

வாடகைக்கு வழற்குதல் - மேலே உள்ள அதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இரண்டாம் நிலை வாடகைதாரர்களுக்கும் (மீள-வாடகைக்கு வழங்குதல்) காப்புறுதியை

விரிவுபடுத்துகிறது. இது திருட்டு அல்லது தவறான பயன்பாடு மற்றும் சுங்கக் கட்டணம் சார்ந்த போக்குவரத்தை விலக்குகிறது.

சாரதி ஆலோசனை - சட்டரீதியான தேவைகளுக்கு இணங்க, சாரதி பயிற்சி வகுப்புகளுக்காக உங்கள் வாகனம் பயன்படுத்தப்படும்போது, இது உங்கள் வாகனத்தை உள்ளடக்கும். எந்தவொரு உரிமைக்கோரலுக்கும் முதல் ரூ. 2,500/-ஐ நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

பாகங்கள் திருடப்படுதல் தொடர்பான நீட்டிப்பு (தனிப்பட்ட இருபயன்பாட்டு வாகனங்களுக்கு மட்டும்) - வாகனம் திருடப்படாவிட்டாலும், வாகனத்தின் துணைக்கருவிகள் அல்லது பாகங்கள் திருடப்படுவதை இது உள்ளடக்கும். ஒவ்வொரு உரிமைக்கோரலுக்கும் ரூ. 2,000/- மேலதிக கட்டணம் செலுத்த வேண்டும்.

வாகனத்தை இழுத்துச் செல்லும் செலவுகள் - பகுதி 1-இன் கீழ் உள்ள இழுத்துச் செல்லும் செலவு வரம்பை, உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை இது அதிகரிக்கும்.

முன்பக்கக் கண்ணாடி / யன்னல் கண்ணாடி - உங்கள் உரிமைக்கோரிக்கையில்லா போனஸைப் பாதிக்காமல், கண்ணாடி உடைவதை (முன்பக்கக் கண்ணாடி அல்லது யன்னல் கண்ணாடி) இது உள்ளடக்கும்.

- சேதத்திற்கான காரணம் எதுவாக இருந்தாலும், கீறப்பட்ட வாகனத்தின் வெளிப்புறப் பகுதிகளும் இதில் அடங்கும்.
- உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதித் தொகை வரை காப்புறுதி வழங்கப்படும்.

சம்பளம் பெறும் சாரதிகளுக்கான ஊழியர் இழப்பீடு - ஊழியர் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின்படி, பணியின் போது ஏற்படும் காயங்களுக்கு உங்கள் சம்பளம் பெறும் சாரதியை இது உள்ளடக்கும்.

- காப்பீட்டாளரின் ஒப்புதலுடன் சட்டச் செலவுகளை இது உள்ளடக்கும்.
- இது உரிமைக்கோரிக்கையில்லா போனஸைப் பாதிக்காது.
- காப்புறுதி இரத்துச் செய்யப்பட்டால் இந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

ஏற்றிச் செல்லப்படும் நிலையில் உள்ள பொருட்கள் (ஆபத்தானவை / ஆபத்தற்றவை) – ஏற்றிச்செல்லப்படும் போது மோதல்கள் அல்லது கவிழ்வதால் ஆபத்தற்ற பொருட்களுக்கு ஏற்படும் சேதங்களை இது உள்ளடக்கும்.

- தீ, வெடிப்பு மற்றும் சில உடையக்கூடிய அல்லது அதிக மதிப்புள்ள பொருட்கள் விலக்கப்பட்டுள்ளன.
- பொருட்களின் மதிப்பு காப்புறுதித் தொகையை விட அதிகமாக இருந்தால், மேலதிக தொகைக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்.
- தீ, வெடிப்பு, வேலைநிறுத்தங்கள், கலவரங்கள் மற்றும் பெட்ரோலியம், பருத்தி, வெடிபொருட்கள் போன்ற சில பொருட்கள் விலக்கப்பட்டுள்ளன.
- காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தால் ஏற்பட்டாலன்றி, மின்சார/இயந்திரக் கோளாறுகளுக்கு காப்புறுதி இல்லை.

வீதி உரிமத்துடன் கூடிய ஓம்னி பேருந்துகள் - வீதி உரிமத்துடன் கூடிய பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளுக்கு ஏற்படும் காயம் அல்லது இறப்பை இது உள்ளடக்கும்.

- பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இருக்கை கொள்ளளவுக்கு மட்டுமே இது பொருந்தும்.
- இதில் சாரதி மற்றும் நடத்துநர் அடங்குவர்.

- ஒவ்வொரு உரிமைக்கோரலுக்கும் ரூ. 2,000/- மேலதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

இறுதிச் சடங்கு செலவுகளுக்கான பலன் - காப்புறுதி செய்யப்பட்ட வாகனம் சம்பந்தப்பட்ட விபத்தில் காப்புறுதி செய்யப்பட்டவர் இறந்தால், பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு ரூ. 25,000/- (அல்லது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை) வழங்கப்படும்.

பொருட்களை கொட்டுதல் (Tipping) மற்றும் தொழில்முறை கருவியாகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் - பொருட்களைக் கொட்டுவதற்கும், ஏற்றுவதற்கும்/இறக்குவதற்கும் அல்லது வணிக நோக்கங்களுக்காகவும் தொழில்முறை கருவியாகப் பயன்படுத்தப்படும் வணிக வாகனங்களை இது உள்ளடக்கும். இதில் வாகனம் கவிழ்ந்துவிடும் அபாயமும் அடங்கும். மேலதிக தொகையாக ரூ. 5,000/- அல்லது உரிமக்கோரிக்கை தொகையில் 5%, இதில் எது அதிகமோ அது வழங்கப்படும்.

வரித் தவணை செலுத்துதல்கள் - நீங்கள் குத்தகைக்கு எடுத்த வாகனம் 30 நாட்களுக்கு மேல் பழுதுபார்க்கப்பட்டால், காப்பீட்டாளர் இரண்டு வரித் தவணைகள் அல்லது ரூ. 100,000/-, இதில் எது குறைவோ அதைச் செலுத்தலாம்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் காப்புறுதி வழங்கப்படாது:

- வாகனம் திருடப்பட்டாலோ அல்லது முழுமையாகப் பயனற்றுப் போனதாக அறிவிக்கப்பட்டாலோ
- சந்தையில் உதிரி பாகங்கள் கிடைக்காவிட்டால்
- வாகனம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டிருந்தால்
- பண அடிப்படையில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டால்

வேலைநிறுத்தங்கள், கலவரங்கள் மற்றும் பொது அமைதியின்மைக்கான உத்தரவாதம் - பின்வருவனவற்றால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்கிறது:

- பொது அமைதியின்மை, வேலைநிறுத்தங்கள் அல்லது கதவடைப்புகள்
- இதுபோன்ற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகள்

காப்புறுதி வழங்கப்படாதவை:

- போர், கலவரங்கள், பயங்கரவாதம் அல்லது இராணுவ நடவடிக்கை
- அணுசக்தி, இரசாயன, உயிரியல் அல்லது இணையவழித் தாக்குதல்கள் தொடர்பான சேதம்

இந்தக் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் (National Insurance Trust Fund) வழங்கப்படுவதோடு, இழப்பை நிரூபிக்கும் பொறுப்பு காப்புறுதி செய்தவரையே சாரும்.

பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த உத்தரவாதம் - அரசியல், மதம் அல்லது சித்தாந்தக் காரணங்களுக்காகச் செய்யப்படும் வன்முறைச் செயல்கள் அல்லது அச்சுறுத்தல்கள் உட்பட, பயங்கரவாதச் செயல்களால் உங்கள் காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்திற்கு ஏற்படும் நேரடிச் சேதத்தை ஈடுசெய்கிறது.

காப்புறதி செய்யப்படாதவை:

- பின்விளைவு இழப்புகள் (உ.ம்: வணிக இடையூறு)
- வேலை நிறுத்தங்கள் அல்லது உற்பத்தி செயல்முறைகளில் ஏற்படும் தாமதங்கள்
- அரசுடமையாக்கல் அல்லது அரசாங்க கையகப்படுத்துதல்கள்

செலுத்தப்படக்கூடிய அதிகபட்ச இழப்பீடு: உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அல்லது காப்புறதித் தொகை, இவற்றில் எது குறைவோ அதற்கு வரம்பிடப்பட்டுள்ளது.

விலக்குகள்:

- அணு, இரசாயன, உயிரியல் அல்லது மின்காந்த ஆயுதங்கள்
- சைபர் தாக்குதல்கள் (ஆயுத அமைப்புகளுடன் தொடர்புடையவை தவிர)
- இந்தக் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் (National Insurance Trust Fund) வழங்கப்படுவதோடு, இழப்பை நிரூபிக்கும் பொறுப்பு காப்புறுதி செய்தவரையே சாரும்.

9. தவணை செலுத்துவதற்கான உத்தரவாதம்

காப்புறுதித் திட்டம் தொடங்கிய 30 நாட்களுக்குள் முழு காப்புறுதித் தவணையும் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், உரிமைக் கோரல் நிராகரிக்கப்படலாம் அல்லது காப்புறுதித் திட்டம் தானாகவே இரத்துச் செய்யப்படலாம்.

10. மோட்டார் வாகனங்களுக்கான கோரிக்கைகளைக் கையாளுதல் - விரைவு வழிகாட்டி

1. **விபத்தை உடனடியாகத் தெரிவிக்கவும்** - 24 மணி நேர உதவி இலக்கத்தை அழைக்கவும்: 011 7 454 454
2. **சேத மதிப்பீடு**
   - ஒரு மதிப்பீட்டாளர் உங்கள் வாகனத்தை ஆய்வு செய்து, உங்களுக்கு ஒரு உரிமைக் கோரல் படிவத்தை வழங்குவார்.
   - பூர்த்தி செய்யப்பட்ட படிவம் மற்றும் உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்தை மதிப்பீட்டாளரிடம், அருகிலுள்ள கிளையில் அல்லது வாட்ஸ்அப் (077-2474778) வழியாகச் சமர்ப்பிக்கவும்.
3. **டிஜிட்டல் முறையில் உரிமைக்கோரல் விருப்பம் -** மதிப்பீட்டாளர் 30 நிமிடங்களுக்குள் வராவிட்டால், விபத்து நடந்த இடத்திலிருந்து புகைப்படங்களையும் தகவல்களையும் பதிவேற்றுவதற்கான இணைய இணைப்பு உங்களுக்கு SMS மூலம் அனுப்பப்படும்.
4. **பொலிஸ் அறிக்கை**
   - அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் விபத்தைப் பற்றித் தெரிவிக்கவும்.
   - சூழ்நிலையைப் பொறுத்து, பொலிஸ் அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல் தேவைப்படலாம்.
5. **உரிமைக் கோரிக்கை தீர்வு விருப்பங்கள்**
   - சிறிய கோரிக்கைகளை விரைவாகத் தீர்க்க முடியும். பழுதுபார்ப்புகளுக்கு, ஒரு மதிப்பீட்டையும் உதிரி பாகங்களின் விலைகளையும் சமர்ப்பிக்கவும்.
   - உங்கள் ஒப்புதலின் பேரில் பணம் செலுத்தும் வசதியும் உள்ளது.
6. **உரிமைக் கோரிக்கை தீர்வு காலம்** - அனைத்து ஆவணங்களும் பெறப்பட்டு சரிபார்க்கப்பட்ட 14 நாட்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் தீர்க்கப்படும்.

7. **இறுதித் தீர்வுக்காகத் தேவைப்படும் ஆவணங்கள்**
   - கடைசி பழுதுபார்ப்பிற்கான பற்றுச்சீட்டு
   - பழுதுபார்ப்பிற்குப் பிந்தைய ஆய்வு (பொருந்தினால்).
   - மாற்றப்பட்ட பாகங்களுக்கான பற்றுச்சீட்டுகள்.
   - பணத்தை வரவு வைப்பதற்கான வங்கிக் கணக்கு விபரங்கள்.
8. **மூன்றாம் தரப்பு மற்றும் முழு இழப்புக் கோரிக்கைகள்** - சூழ்நிலையின் அடிப்படையில் குறிப்பிட்ட வழிமுறைகள் வழங்கப்படும்.
9. **உதவி வேண்டுமா?**
   - உரிமைகோரல் விசாரணைகள்: 071-4978978
   - வாட்ஸ்அப் (ஆவணங்களுக்கு மட்டும்): 077-2474778
   - பழுதுபார்ப்புக்கான அனுமதி: **MC.ApprovalsUnit@orientinsurance.lk**
   - கட்டணங்கள்: **MC.PaymentsUnit@orientinsurance.lk**

11. முறைப்பாடுகள் மற்றும் பின்னூட்டங்கள்

எங்கள் சேவையில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால், நீங்கள்:

- எந்தவொரு கிளை அல்லது விற்பனை நிலையத்திற்கும் செல்லலாம்.
- எங்கள் வாடிக்கையாளர் சேவை அதிகாரியை 011 20 30 311 என்ற இலக்கத்திலும் அழைக்கலாம்.
- மின்னஞ்சல்: **tellus@orientinsurance.lk**
- இணையவழியில் சமர்ப்பிக்க: **www.orientinsurance.lk/reach-us**
- முகவரி:

> **உப தலைவர் – முகாமைத்துவப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் நிர்வாகப் பிரிவு,**
> வரையறுக்கப்பட்ட ஒரியன்ட் இன்சூரன்ஸ் நிறுவனம்,
> ஜே.எப்.ஐ. கோபுரம் 3, 10வது மாடி,
> இல. 75, பியதாச சிறிசேன மாவத்த, கொழும்பு 10.

அடுத்து என்ன நடக்கும்?

- 3 வேலை நாட்களுக்குள் உங்களுக்கு ஒரு உறுதிப்படுத்தல் கடிதமும் ஒரு குறிப்பு இலக்கமும் அனுப்பப்படும்.
- முறைப்பாடுகள் 14 நாட்களுக்குள் தீர்க்கப்படும்.
- மேன்முறையீடுகள் 14 வேலை நாட்களுக்குள் பரிசீலிக்கப்படும்.

12. பிணக்குத் தீர்வு

இன்னும் உங்களுக்கு திருப்தி இல்லை என்றால்

1. **இணக்க அலுவலரிடம் மேன்முறையீடு செய்ய**

மின்னஞ்சல்: **tellus@orientinsurance.lk** | தொலைபேசி: +94 112 020 429

2. **மேலதிக நடவடிக்கை எடுக்க**

- **காப்புறுதி குறைதீர்ப்பாளர் (ஒம்பூட்ஸ்மன்)**

  > முகவரி: இல. 143A, வஜிர வீதி, கொழும்பு 05
  > இணையதளம்: **www.insuranceombudsman.lk**
  > தொலைபேசி: + 94 112 505542 / 041

- **இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

  > முகவரி: உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
  > மின்னஞ்சல்: **investigation@ircsl.gov.lk** / **info@ircsl.gov.lk**
  > தொலைபேசி: +94 112 396 184-9 / 335 167

3. **இறுதித் தீர்வு:** இலங்கைச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம் அல்லது சட்ட நடவடிக்கை.

13. பிற முக்கியத் தகவல்கள்

- காப்பீட்டுப் பாதுகாப்பு எடுப்பதற்கு முன், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் கையொப்பமிட்டுள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- எதிர்காலத் தொடர்புகளுக்காக, நிறுவனம் உங்களுடைய தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்களைச் சரியாகப் புதுப்பித்திருக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தில் வாகனத்தின் பயன்பாடு குறித்த துல்லியமான தகவல்கள் இருக்க வேண்டும்.
- காப்புறுதிக் காலத்தில் உங்கள் வாகனத்தின் காப்பீட்டுத் தொகை அதன் தற்போதைய சந்தை மதிப்பைப் பிரதிபலிப்பதை உறுதிசெய்யுங்கள்.
- அனைத்து குறிப்பிடத்தக்க மாற்றங்களும் (பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள், வாகனத்தில் செய்யப்படும் திருத்தங்கள் போன்றவை) உடனடியாக நிறுவனத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.
- உங்கள் காப்புறுதி ஒரு புதிய உரிமையாளருக்கு மாற்றத்தக்கது அல்ல. எனவே, காப்புறுதிச் சான்றிதழ்/அட்டையை புதிய உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

இந்தக் காப்புறுதித் தயாரிப்புத் தகவல் ஆவணம், காப்புறுதிக் கொள்கையின் முக்கியக் காப்புறுதிகள் மற்றும் விதிமுறைகளின் சுருக்கத்தை வழங்குவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளதோடு, இது உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படவில்லை. தயாரிப்புக்குப் பொருந்தக்கூடிய ஒப்பந்தத்திற்கு முந்தைய மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் விலக்குகள் பற்றிய முழு விபரங்களும் உங்கள் காப்புறுதிக் கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆவணங்களில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், கொள்கை ஆவணத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே செல்லுபடியாகும்.

ஓரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடெட்,

ஜே.ப்.ஐ. கோபுரம் 3,
10ம் மாடி,
இல.75, பியதாச சிறிசேன வீதி,
கொழும்பு 10

தொ.இல : 011 20 30 300

இணையதளம் : www.orientinsurance.lk

ஓரியண்ட் இன்சூரன்ஸ் லிமிடெட், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் உரிமம் பெற்ற நிறுவனம் ஆகும்.